இலங்கை வசமுள்ள தமிழ்நாட்டு மீனவர்களையும் மீன்பிடிப் படகுகளையும் உடனே விடுவித்திட

# கூட்டுப் பணிக்குழுக் கூட்டத்தை நடத்த நடவடிக்கை எடுப்பீர் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்குக் கடிதம்!

**சென்னை, ஜூன் 27-**

**இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுத்திடவும், தற்போது இலங்கை வசமுள்ள 47 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட கூட்டுப் பணிக் குழுக் கூட்டத்தை உடனடியாக நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (25.06.2024) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், 25.06.2024 அன்று, INDTN12MM5138 என்ற பதிவு எண் கொண்ட விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக வேதனையுடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 2024 ஆம் ஆண்டில் மட்டும் இலங்கைக் கடற்படையினரால் இதுவரை 203 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 27 படகுகள் சிறைபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கோடிட்டுக் காட்டியுள்ளார். இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் இது போன்று அடிக்கடி கைது செய்யப்படுவது, தமிழ்நாட்டின் மீனவ சமுதாயத்தினரிடையே ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்த விஷயத்தில் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக தலையிட்டு, தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் தொடர்ந்து இதுபோன்று கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், தற்போது இலங்கை வசமுள்ள 47 மீனவர்களையும், 166 மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திடவும், கூட்டுப் பணிக் குழு கூட்டத்தைக் கூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கையை விரைந்து எடுத்திடுமாறு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோரியுள்ளார்.

# பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு... முதல் பக்கத் தொடர்ச்சி

அரசுத் துறைகளில் மட்டுமல்லாது, பெருந்தொழில் மற்றும் குறு, சிறு நிறுவனங்களின் மூலமாகவும் ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளோம். நமது அரசு மேற்கொண்ட பல்வேறு முன்னெடுப்புகளின் காரணமாகவும், மிகச்சிறப்பான முறையிலே நடத்தி முடிக்கப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலம் கிடைக்கப் பெற்ற பெரும் முதலீடுகள் காரணமாகவும் இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் கடந்த 3 ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வெறும் வார்த்தையாக அல்ல, ஆதாரங்களோடுதான் இதனை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் அமைப்பு சார்ந்த தனியார் துறைகளில் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் குறித்த புள்ளி விவரங்கள் ஒன்றிய அரசின் தொழிலாளர் வைப்பு நிதி நிறுவனத்தின் மூலம் பெறப்பட்டது. இது ஒன்றிய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் ஓர் அமைப்பாகும். இந்த நிறுவனத்தின் தரவுகளின்படி, கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் 77 லட்சத்து 78 ஆயிரத்து 999 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. அவர்களுக்குத் தொழிலாளர் வைப்பு நிதி கணக்குகளும் தொடங்கப்பட்டுள்ளன.

### கடந்த 3 ஆண்டுகளில் 5.8 லட்சம் பேருக்கு வேலை!

இதுமட்டுமின்றி, என்னுடைய கனவுத் திட்டம் என்று நான் எப்போதும் பெருமையோடு குறிப்பிடக்கூடிய "நான் முதல்வன் திட்டம்" மூலமாகச் சிறப்பு பயிற்சிகள் தரப்பட்டு வருகிறது. இதன் மூலம் படித்த இளைஞர்களின் திறன்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலமாக இதுவரை, 3 இலட்சத்து 6 ஆயிரத்து 459 நபர்களுக்குத் தனியார் துறைகளில் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல, தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலத்துறையின் மூலமாக நடத்தப்பட்ட சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் மூலமாக கடந்த 3 ஆண்டுகளில் 2 இலட்சத்து ஓர் ஆயிரத்து 596 இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டது. இந்த இரண்டையும் சேர்த்து, தமிழ்நாடு அரசின் முயற்சியினால், கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், மொத்தம் 5 இலட்சத்து 8 ஆயிரத்து 55 தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

'நம் இளைஞர்கள்தான் நம் பலம்! அவர்கள்தான் நமது எதிர்கால வளத்திற்கு அடிப்படையானவர்கள்!' இதனை உணர்ந்த காரணத்தினால், தமிழ்நாடு அரசு இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியினை எதிர்நோக்கி இருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்குத் தற்போது ஒரு மகிழ்ச்சியான செய்தியினை பேரவையில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். வரும் ஜனவரி 2026க்குள், அதாவது இன்னும் 18 மாதங்களுக்குள் பல்வேறு அரசுப் பணியிடங்களுக்காக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 17 ஆயிரத்து 595 பணியிடங்களும், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக 19 ஆயிரத்து 260 ஆசிரியப் பணியிடங்களும், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 3 ஆயிரத்து 041 பணியிடங்களும், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 6 ஆயிரத்து 688 பணியிடங்களும் நிரப்பப்படும்.**

**2026ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் மொத்தம் 46 ஆயிரத்து 584 பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது தவிர, சமூக நலத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளிட்ட முக்கிய துறைகளில் காலியாக இருக்கக் கூடிய 30 ஆயிரத்து 219 பணியிடங்களும் நிரப்பப்படும்.**

**இவற்றை மொத்தமாக சேர்த்துப் பார்க்கையில், 75,000க்கும் மேற்பட்ட அரசுப் பணியிடங்கள் வரும் 2026ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் நிரப்பப்படும் என்பதை தங்கள் வாயிலாக மகிழ்ச்சியுடன் தெரிவித்து அமைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி – சோமாஸ்பாடி கிராமத்தில் உள்ள

# மாரியம்மன் கோயிலை புதுப்பிக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கோரிக்கை !

சென்னை, ஜூன் 27–

கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, சோமாஸ்பாடி கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோயிலை புதுப்பிக்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கோரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :–

**கு.பிச்சாண்டி:** என்னுடைய கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, சோமாஸ்பாடி கிராமத்தில் இருக்கின்ற மாரியம்மன் கோயிலை புதுப்பிக்க வேண்டும் என்ற அங்குள்ள மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையிலேயே அதுகுறித்து அறிவிப்பு வெளியிடுவார்களா?

மேலும், அருள்மிகு நெல்லையப்பர் கோயிலில் தேரை வடம் பிடித்து இழுத்தபோது, கயிறு சரியில்லாமல் இருந்தது என்று அங்குள்ள பத்திரிகை மற்றும் தொலைக்காட்சியில் செய்திகள் வந்தன. ஆனால், அதற்கு இரும்புச் சக்கரம் மாற்றப்பட்டிருக்கிறது. அங்கு இரும்பு சக்கரம் மாற்றியது போன்று, திருவண்ணாமலை கோயிலில் இரும்புச் சங்கிலி இருப்பதைப் போன்று, அனைத்துத் திருக்கோயில் களின் தேரோட்டங்களிலும் இரும்புச் சங்கிலிகளைப் போட்டு தேரை இழுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.




**பி.கே.சேகர்பாபு:** ஆசியாவிலே இருக்கின்ற மிகப்பெரிய தேர்களில் மூன்றாவது தேர் அத்தேராகும். 28x28 என அகலம், நீளம் மற்றும் 80 அடி உயரம் கொண்டது அந்தத் தேர். கடந்த 9 நாள் உற்சவத்தின் இறுதி நாளான நேற்று தேரை வடம் பிடித்து இழுக்கின்ற நிகழ்ச்சி நடைபெற்றது. தேரின் வடத்தை பின்னால் இருந்து நெம்புகோல் தருவதற்கு முன்பாக பக்தர்கள் பக்திப் பரவசத்தோடு ஒட்டுமொத்தமாக இழுத்ததன் காரணமாக அந்தத் தேரின் வடம் அறுந்தது. அதற்கு மாற்றாக திருச்செந்தூர் தேர் வடம் தயாராக வைக்கப்பட்டிருந்தது. அந்தத் தேர் வடத்தை உடனடியாக இணைத்து, நேற்று இரவு 9.30 மணியளவில் 5 சுவாமி களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, வெற்றிகரமாக தேர் நிலையை அடைந்தது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எல்லா தேர்களுக்கும் தேரினுடைய இணைப்புப் பகுதியில் இரும்புச் சங்கிலி இருக்கும். பக்தர்கள் நீளமாக வடம் பிடிக்க வேண்டியிருக்கிறது. இந்த நெல்லையப்பர் தேர் என்பது 450 டன் எடை கொண்ட தேராகும்.

அந்தத் தேரை இழுப்பதற்கு வடம் எப்பொழுதும் கயறினால் தான் நீளமாக இழுத்துச் செல்ல முடியும் என்ற காரணத்தினால் தான் அனைத்து திருத்தேர்களிலும் வடம் அதிக எடைக் கொண்ட தேருக்கு கயற்றினால்தான் பின்னப்படுகிறது. நேற்று நடைபெற்ற அந்த உற்சவத்தில், நம்முடைய தீயணைப்புத் துறை, பொதுப் பணித் துறை வடத்திற்கும், தேருக்கும் சான்றிதழ் அளித்த நிலையில் தான், அந்தத் தேர் வீதி உலாவிற்கு எடுத்து வரப்பட்டது. அவர் கோரியபடி எந்தெந்தத் திருத்தேர்களுக்கெல்லாம் சங்கிலிகள் தேவையோ, அவற்றிற்கு பொருத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் கூறிய திருக்கோயில் இந்த ஆண்டு திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 8,624 திருக்கோயில்களுக்கு மண்டல குழு, மாநில குழு, தொல்லியல் குழு அனுமதி பெற்று அதிகளவில் ஆயிரக்கணக்கான திருக்கோயில்களுக்கு அனுமதியளித்த ஆட்சி, தமிழ்நாடு முதல்வர் தலைமையில் இருக்கின்ற இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் கோரிய அந்தத் திருப்பணியும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல், நேற்றையதினம் ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சி. ஏற்கெனவே 150 ஆண்டுகள் கடந்த சீத்தனாஞ்சேரி திருக்கோயிலினுடைய திருத்தேர் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் தேர் வீதி உலா நடத்தப்பட்டது. விழுப்புரத்திலே அதேபோல், 100 ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட்டில் இல்லாமல் இருந்த திருத்தேர் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. நேற்றைய ஒரு மகிழ்ச்சி, அன்றைக்கு ஓடாத திருத்தேரை, திருவாரூர் ஆழித் தேரை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தேரை ஓட்டி புகழ்ப் பெற்றார்.

இன்றைக்கு ஓடாமல் இருந்த கண்டதேவி தேர், பல்வேறு இன மக்கள் ஒன்று திரட்டி ஒரு சேர அவர்களை ஒற்றுமைப்படுத்தி திராவிட மாடல் ஆட்சியின் முத்தாய்ப்பாக நேற்றைக்கு கண்டதேவி திருத்தேரை 18 ஆண்டுகளுக்குப் பிறகு ஓட்டிய பெருமை முதல்வர் அவர்களையே சாரும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் உறுப்பினர் தேர் சம்பந்தப்பட்ட கேள்வி என்பதால், இதனையும் தெரிவித்து, பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



# 'சிலந்தி' பதில்கள்!

**கேள்வி :** சென்ற முறை நாடாளுமன்றத்தின் படிக்கட்டுகளை வணங்கிய மோடி இந்த முறை அரசியல் சட்டப் புத்தகத்தை வணங்கியுள்ளாரே?





**பதில் : நாடாளுமன்ற கட்டடப் படிகளில் விழுந்து வணங்கி, அந்த கட்டடத்தையே மாற்றி புதிய கட்டடம் நாடாளுமன்றத்துக்கு கட்டிவிட்டார். இந்த முறை அரசியல் சட்ட புத்தகத்தை வணங்கி அதையும் மாற்றப்போவதாக சொல்லாமல் சொன்னாரோ; என்னவோ?**

**கேள்வி :** "ஆட்சிக்குத் தேவை நல்ல மெஜாரிட்டி! நாட்டுக்குத் தேவை நல்ல எதிர்க் கட்சி!" என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளாரே?

**பதில் : நாட்டுக்குத் தேவையான நல்ல எதிர்க்கட்சியாக நமது பிரதமர் மோடி செயல்பட முடிவெடுத்துவிட்டார் போலும்! ஆட்சியை விட தான் நாட்டையே நேசிப்பதாக நாடகமாடும் மோடி தனது கட்சிக்கு பெரும்பான்மையின்றி ஆட்சியை நடத்துவதை விட்டு இறங்கி விரைவில் நல்ல எதிர்க்கட்சியாக இருந்து நாட்டு சேவையைத் தொடங்குவார் என எதிர்பார்ப்போமாக!**



**கேள்வி :** ஒரு நபர் ஆணைய விசாரணையில் நீதி கிடைக்காது என்று எடப்பாடி பழனிச்சாமி கூறியிருக்கிறாரே?

**பதில் : தூத்துக்குடி துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக அமைத்த ஒரு நபர் ஆணைய கமிஷன் விசாரணையில் நீதி கிடைக்கவில்லையா? ஒரு வேளை பழனிச்சாமி விரும்பிய நீதி கிடைக்காது என்று புலம்பியிருப்பாரோ என்னவோ?**

**கேள்வி :** விஷச்சாராய விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீத்தாராமனும் எடப்பாடியும் கேட்கின்றனரே!


**பதில் : இந்த விவகார விசாரணையில் ஏதாவது மறைக்கப்படுகிறது, அல்லது மறுக்கப்படுகிறது என்று ஆதாரத்துடன் சுட்டிக் காட்டி அதனால் மாநில சி.பி.சி.ஐ.டி. விசாரணையில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று கூறி கேட்டிருந்தால் கூட நியாயம் உண்டு! பொத்தாம் பொதுவாக மாநில போலீஸ் மீது மக்களுக்கு அவநம்பிக்கை உருவாக்கிடும் வகையில் 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்று கேட்பது எடப்பாடி வகையறாக்களுக்கு ஏற்புடையதாக இருக்கலாம். ஆனால் ஒன்றிய நிதியமைச்சர் நிதானமிழந்து பேசலாமா? பா.ஜ.க. ஆண்டிடும் உ.பி.யில், குஜராத்தில், ம.பி.யில் இதேபோன்று விஷச்சாராயம் அருந்தி நூற்றுக்கணக்கானோர் இறந்த நிலையில் அங்கெல்லாம் சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட்டதா?**



**விஷச்சாராய சாவு விவகாரம் குறித்து உ.பி.யில் சி.பி.ஐ. விசாரணை நடத்தப்படவேண்டும் என்று அம்மாநில முன்னாள் முதல்வர் மாயாவதி கேட்டாரே; அப்போதும் ஒன்றிய நிதியமைச்சராக நிர்மலா சீதாராமன் இருந்தாரே! அவரும் மாயாவதியுடன் சேர்ந்து உ.பி. கள்ளச்சாராய சாவுக்கு சி.பி.ஐ. விசாரணை கேட்டாரா? திருமதி நிர்மலா சீத்தாராமனுக்கு உ.பி.யில் ஒரு நீதி - தமிழகத்தில் ஒரு நீதியா?**

**"சி.பி.ஐ. என்ன வானத்திலிருந்து குதித்ததா?" - என்று எடப்பாடி பழனிச்சாமியின் தலைவி ஜெயலலிதா கேட்டதை பழனிச்சாமி மறந்து இருக்கலாம்; நாடு மறக்கவில்லை! ஒரு பெரும் துயரச்சம்பவத்தில் 'அரசியல் குளிர்காய' நினைக்கும் அற்பத்தனமே இவை!**

**கேள்வி :** அமைச்சர் முத்துசாமியை பதவி நீக்கம் செய்ய தி.மு.கழகத்துக்கு அழுத்தம் தரவேண்டும். இந்தத் துயரச் சம்பவம் ஒட்டுமொத்த நாட்டின் ஆன்மாவை அசைத்துள்ளது என்று குறிப்பிட்டு பா.ஜ.க. தேசியத் தலைவரும், ஒன்றிய அமைச்சருமான ஜெ.பி.நட்டா காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேக்கு கடிதம் எழுதியுள்ளதாக செய்தி வெளிவந்துள்ளதே!



**பதில் : நட்டா எப்போதுமே அரை குறைத் தெளிவோடு அரசியல் நடத்திடும் கூமுட்டை! தமிழ்நாட்டில் நடப்பது தி.மு.கழக ஆட்சி! கடந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணி அமைத்து போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளது! அது 'இந்தியா' (INDIA) கூட்டணிஉருவாவதற்கு முன் தமிழ்நாட்டில் மட்டுமே உருவாக்கிக் கொண்ட கூட்டணி என்பது போன்ற விவரங்கள் கூடத் தெரிந்து கொள்ளாத நிலையில் நட்டா கார்கேக்கு கடிதம் எழுதியுள்ளார். மதுரையில் எய்ம்ஸ் கட்டடத்தின் கட்டுமானப் பணி துவங்கப்படாத நிலையில் மதுரைக்கு வந்து அங்கு நடந்த தொழிலதிபர்கள் கூட்டத்திற்குப் பின் மதுரை எய்ம்ஸ் தொடர்பாக 95 சதவீத பணி முடிந்துவிட்டதாகக் கூறிய இவரைப் போன்ற பேர்வழிகள் இப்படி அரைகுறைத்தனமாக ஏனோதானோ என்று கருத்தறிவிப்பதில் புதுமை ஒன்றுமில்லையே!**

**கேள்வி :** அண்ணாமலை தலைமையில் பா.ஜ.க. குழு ஆளுநர் மாளிகையில் ஆளுநரை சந்திக்கச் சென்றது - பின்னர் வெளியே வந்து தமிழிசைதான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அங்கே அண்ணாமலையைக் காணோமே!

**பதில் : மூடி மறைக்க நினைத்த சில உள்ளடிக்காட்சிகள் மெதுவாக வெளிச்சத்துக்கு வருகிறது; அவ்வளவுதான்!**